# சுவா சூ காங் தொடக்கப்பள்ளி
# தொடக்கநிலை 3
# சொல்வதெழுதுதல் – தவணை 2, 2026

பெயர் : ____________________ வகுப்பு : ____________

## சொல்வதெழுதுதல் 1

1) மாறன் பட்டம் விடுகிறான்.
2) உமா செடி வளர்க்கிறாள்.
3) குமார் கேக் சாப்பிடுகிறான்.
4) நாங்கள் தோட்டத்தில் செடி நடுகிறோம்.
5) அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.
6) அம்மா மரத்திற்கு அடியில் உட்கார்ந்து இருக்கிறார்.
7). ராமு காற்பந்து விளையாடுகிறான்.

## சொல்வதெழுதுதல் 2

1. இன்று என் தோழியின் பிறந்தநாள்.
2. அவளுடைய உறவினர்கள் வந்தார்கள்.
3. அவள் கேக் வெட்டினாள்.
4. எல்லாரும் பிறந்தநாள் பாடல் பாடினார்கள்.

## சொல்வதெழுதுதல் 3

1) அம்மா தம்பியை அழைத்தார்.
2) அப்பா சன்னலைத் துடைத்தார்.
3) பாட்டி தம்பியைக் குளிப்பாட்டினார்.
4) தாத்தா குவளையை எடுத்தார்.
5) அத்தை உணவுகளை மேசையில் வைத்தார்.

## சொல்வதெழுதுதல் 4

1) அப்பா ஒரு முயல் வாங்கி வந்தார். அவர் முயலை மாறனிடம் கொடுத்தார்.
2) மீனா அங்கே வந்தாள். அவள் கீரையைத் தரையில் வைத்தாள்.
3) முயல் குதித்து குதித்து வந்தது. அது கீரையை மென்று தின்றது.
4) முகிலன் வீட்டுக்கூடத்துக்கு வந்தான். அவன் முயலைத் தடவிக் கொடுத்தான்.

## சொல்வதெழுதுதல் 5

செல்வி பள்ளியிலிருந்து வீட்டுக்கு வந்தாள். அவள் வழியில் ஒரு பணப்பையைக் கண்டாள். அவள் பணப்பையில் நிறையப் பணம் இருப்பதைப் பார்த்தாள். அவள் பணப்பையைக் காவலரிடம் கொடுத்தாள்.

## சொல்வதெழுதுதல் 6

அன்று சனிக்கிழமை. சிவா நூலகத்துக்குச் சென்றான். நூலகத்தில் நிறையக் கதைப் புத்தகங்கள் இருந்தன. சிவா தனக்குப் பிடித்த கதைப் புத்தகத்தை எடுத்தான். அவன் ஒரு நாற்காலியில் அமர்ந்து தான் எடுத்து வந்த கதைப் புத்தகத்தைப் படித்து முடித்தான்.